A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

## முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்

## மேல்முறையீட்டு மனு எண் 37 / 2023

திரு M. ஆறுமுகம்,
எண்.7, கடலூர் மெயின் ரோடு,
கீழ்புவனகிரி, கடலூர் மாவட்டம் – 608 601.

………மேல்முறையீட்டாளர்
(Rep by திரு R. மணிமாறன், வழக்கறிஞர்)

எதிர்

1. செயற்பொறியாளர்/ இ&ப/சிதம்பரம்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33-11 KV சிதம்பரம் துணை மின் நிலைய வளாகம்,
ஆனந்தீஸ்வரன் கோவில் அருகில்,
சிதம்பரம் – 608 001.

2. உதவி செயற்பொறியாளர்/ இ&ப/பி.முட்லூர்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33-11 KV துணை மின் நிலைய வளாகம்,
CDM-CDL மெயின் ரோடு, பி.முட்லூர் – 608 501.

. . . எதிர்மனுதாரர்கள்
(திருமதி R.ஜெயந்தி செயற்பொறியாளர் / இ&ப/சிதம்பரம்
திருமதி S. மகேஷ்வரி, உதவி செயற்பொறியாளர்/ இ&ப/பி.முட்லூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 23-05-2023**

**கேட்புரை நாள்: 20-07-2023**

**ஆணை நாள்: 31-07-2023**

23.05.2023 அன்று பெறப்பட்ட திரு M. ஆறுமுகம், எண்.7, கடலூர் மெயின் ரோடு, கீழ்புவனகிரி, கடலூர் மாவட்டம் – 608 601 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 37/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 20.07.2023 அன்று நடைபெற்றது.

மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

கடலூர் மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் வழங்கிய 17.02.2023 நாளிட்ட ஆணையை இரத்து செய்து மின் இணைப்பு எண்.052–027–3–ஐ தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய கோரி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 விவசாய மின் இணைப்பு எண்.052–027–3–ஐ தன் பெயருக்கு பெயர் மாற்றம் கோரி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளர் பெயர் மாற்றம் கோரும் மின்இணைப்பு எண்:052–027–3 ஆனது 133/2Aல் வழங்கப்பட்டுள்ளதாகவும், புல எண் 133/2A–ற்கான வருவாய் ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் மின்இணைப்பு எண்:052–027–3–ல் பெயர் மாற்றம் செய்ய மின்வாரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் கடலூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 15.12.2022 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கடலூர் மின்பகிர்மான வட்டம் 17.02.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

### 3.0 மன்றத்தின் தீர்வு :

3.1 கடலூர் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 17.02.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

***<u>வழக்கெழு வினா – 1</u>***

*எதிர்மனுதாரர் தனது அலுவலக விவசாய விண்ணப்ப பதிவேட்டின்படி மனுதாரர் பெயர் மாற்றம் கோரும் விவசாய மின் இணைப்பு எண். 052-027-3 ஆனது சர்வே எண் 133/ 2Aல் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என எதிர் மனுதாரர் அளித்த ஆவணத்தை மன்றம் பரிசீலனை கொள்கிறது.*

*ஆனால் மனுதாரர் தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய கோரி அளித்த விண்ணப்பத்துடன் தனக்கு சொந்தம் என்பதற்கான சர்வே எண் 132/1A2 என்பதற்கான ஆவணத்தை இணைத்துள்ளார், சர்வே எண் 133/2A-ற்கான ஆவணங்கள் எதும் சமர்பிக்கவில்லை. எனவே மின் இணைப்பு எண். 052-027-3 ஐ பெயர் மாற்றம் செய்ய புல எண்.133/2A தனக்கு சொந்தம் என்பதற்கான வருவாய் ஆவணங்களுடன் மனுதாரர் விண்ணப்பம் அளிக்கும்பட்சத்தில் மனுதாரர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யுமாறு எதிர்மனுதாரர்களுக்கு இம்மன்றம் உத்தரவிடுகிறது.*

***<u>வழக்கெழு வினா – 2</u>***

*வேறு பரிகாரங்கள் பெற மனுதரர் தகுதியானவரா?*

*மேற்கண்ட வழக்கெழ வினா – 1 மனுதாரருக்கு எதிராக முடிவு கண்டுள்ள நிலையில் வேறு எந்த பரிகாரமும் மனுதாரருக்கு கிடைக்க கூடியதில்லை என்று இம்மன்றம் முடிவு செய்கிறது. செலவுதொகை எதுவும் இல்லை."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 20.07.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு R. மணிமாறன், வழக்கறிஞர் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி R.ஜெயந்தி செயற்பொறியாளர் / இ&ப/சிதம்பரம் மற்றும் திருமதி S. மகேஷ்வரி, உதவி செயற்பொறியாளர்/ இ&ப/பி.முட்லூர், கடலூர்

மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் மேலமணக்குடி கிராமம், புல எண்.132/1A2, 0.85 சென்ட் (0.34.5 ஏர்ஸ்) நிலம் முன்பு மனுதாரரின் தந்தையார் மாணிக்கம் த/பெ. பொன்னுசாமி அவர்களுக்கு உரிமையான நிலம் எனவும், மேற்கண்ட நிலத்திற்கு தென்புரம் அமைந்துள்ள புல எண்.133/2A நிலமும், வேறு நிலங்களும் ஏற்கெனவே மனுதாரரின் தந்தை மேற்கண்ட மாணிக்கம் த/பெ. பொன்னுசாமி அவர்களுக்கு உரிமையாக இருந்தது என்றும் தனது அனைத்து நிலங்களின் சாகுபடிக்காக மாணிக்கம் புல எண்.132/1A2 நிலத்தில் குழாய் கிணறு (bore well) இறக்கி அந்த நீரைக் கொண்டு சாகுபடி செய்து வந்ததாகவும் அதற்கு மின் இணைப்பு கேட்டு மனு கொடுத்து 2000ம் ஆண்டில் மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், மின் இணைப்பு எண்.052-027-03, இந்த மின் இணைப்பு வழங்கப்பட்ட போது குழாய் கிணறு புல எண்.132/1A2ல் இருந்ததால் அதற்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது என்றும் அதன் தென்புறமுள்ள புல எண்.133/2Aல் எவ்வித குழாய் கிணறு எந்தக் காலத்திலும் கிடையாது என்றும் அதனால் மின் இணைப்பும் எந்தக் காலத்திலும் புல எண்.133/2Aல் இருந்ததில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேல்முறையீட்டாளர் தனது தந்தையார் உயிரோடு இருந்த பொழுது தனது சொத்துக்களை பொறுத்து 24.02.2005-இல் மனுதாரர் பெயருக்கு ஒரு

தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்து அது புவனகிரி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்:159/2005 என பதிவாகியுள்ளதாகவும், பின்னிட்டு அதில் புல எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ள விவரம் அறிந்து 16.10.2009ல் ஒரு பிழைதிருத்தல் பத்திரம் எழுதி அது ஆவண எண்: 1597/2009 ஆக பதிவாகியுள்ளதாகவும், அதன்படி புல எண். 132/1A2, 0.85 சென்ட் நிலம் அதில் உள்ள குழாய் கிணறு, மின் மோட்டார் மற்றும் விவசாய மின் இணைப்பு எண். 052-027-03 ஆகியவற்றை தான் அடைந்து கொள்ளும்படி மனுதாரரின் தந்தை மாணிக்கம் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 தன்னுடைய தந்தை மாணிக்கம் முதலியார் பெயரில் வழங்கப்பட்ட விவசாய மின் இணைப்பு எண்.052-027-03 தன் தந்தை மாணிக்கத்திற்கு உரிமையானதாகும் எனவும், அது புல எண்.132/1A2 நிலத்தில் உள்ள குழாய் கிணறு மற்றும் அதில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார் ஆகியவற்றின் உபயோகத்திற்காக கொடுக்கப்பட்டு அவரால் பயன்படுத்தப்பட்ட மின் இணைப்பு எனவும், அந்த மின் இணைப்பு வழங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை புல எண்.132/1A2ல் தான் உபயோகத்தில் இருந்து வருகிறதாகவும், இவ்வாறு குழாய் கிணறு புல எண்.132/1A2 நிலத்தில் உள்ளது என்பதற்கு ஆதாரமாக கிராம நிர்வாக அலுவலர் அளித்துள்ள புல வரைபடம் (FMB) மற்றும் அடங்கல் ஆகியவற்றை உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேல்முறையீட்டாளர் தன் தந்தைக்கு உரிமையாக இருந்த மேற்கண்ட மின் இணைப்பு அவர் எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின்படி தனக்கு உரிமையாகிவிட்டது எனவும், சிதம்பரம் செயற்பொறியாளர் தன் புகாருக்கு அளித்த பதிலில் மின் இணைப்பு பெறும் விண்ணப்பம் தனது தந்தை மாணிக்கம் அவர்களால் புல எண்.133/2A நிலத்திற்கு கொடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளதாகவும், ஆனால் அந்த மனுவில் கூறப்பட்டுள்ள புல எண் விவரம் பற்றி மனுதாரருக்கு ஏதும் தெரியாது என்றும் புல எண்.133/2A நிலத்தில் குழாய் கிணறு எதுவும் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை எனவும் மேலே குறிப்பிட்டுள்ளது போல மின் இணைப்பு வழங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை குழாய் கிணறு புல எண்.132/1A2ல் தான் உள்ளதாகவும் மின் இணைப்பும் இந்த புல எண்ணில்தான் கொடுக்கப்பட்டுள்ளதாகவும்

இதனை நேரில் பார்வையிட்டும் தெரிந்து கொள்ளலாம் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேற்கண்ட மின் இணைப்பு எண்.052–027–03–ன் உரிமையை தனது தந்தை எந்து காலத்திலும் தனது சகோதார் குணசேகரனுக்கு கொடுக்கவில்லை எனவும், எனவே இந்த மின் இணைப்பை பொறுத்து அவர் உரிமை ஏதும் கோர முடியாது எனவும், தனது தந்தை புல எண்.133/2A நிலத்தை தனது சகோதரர் குணசேகரனுக்கு எழுதிக் கொடுத்துள்ள போதிலும் அந்த ஆவனத்திலும் 133/2A நிலத்தில் குழாய் கிணறு இருப்பதாகவோ, மேலே குறிப்பிட்ட மின் இணைப்பு இருப்பதாகவோ குறிப்பிட்டு குழாய் கிணறு மற்றும் மின் இணைப்புடன் கொடுப்பதாகவோ எழுதிக் கொடுக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும் செயற்பொறியாளர் கொடுத்த எதிருரையில் மனுதாரர் ஆறுமுகமாகிய தான் புல எண்.132/2Aல் உள்ள மின் இணைப்பு எண்.052–027–03ஐ தனது பெயருக்கு மாற்றி தருமாறு 22.07.2022ல் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்ததாக குறிப்பிட்டுள்ளதாகவும், தன்னுடைய மனுவில் தான் குறிப்பிட்டுள்ள புல எண்.132/1A2 மட்டுமே அதில் மின் இணைப்பு இல்லை என்று செயற்பொறியாளர் குறிப்பிட்டுள்ளதும் தவறு எனவும், இப்பொழுது பார்வையிட்டாலும் புல எண்.132/1A2ல்தான் குழாய் கிணறு, மின் இணைப்பு, மின் மோட்டார் ஆகியவை உள்ளது தெரிய வரும் ஆனால் இந்த விவரங்கள் எதையும் கருத்தில் கொள்ளாமல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே அந்த உத்தரவை ரத்து செய்ய இந்த மேல்முறையீடு தாக்கல் செய்வதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மேல்முறையீட்டாளர், மனுதாரர் தன் மனுவில் தெரிவித்த விவரங்களையோ, விசாரணையில் நேரில் ஆஜராகி தாக்கல் செய்த விளக்க உரையில் தெரிவித்த விவரங்களையோ ஆவணங்களையோ பரிசீலிக்காமல் உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும், மேலும் மனுதாரர் தனது விளக்க உரையுடன் தாக்கல் செய்த ஆவனங்களை பற்றி தன்னுடைய தீர்ப்புரையில் குறிப்பிடாததோடு அவற்றை துளியும் பரிசீலிக்காமல் உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மனுதாரருடைய மனுவில் அவர் குறிப்பிட்டுள்ள விவரப்படி புல எண்.132/1A2 நிலத்தில் மட்டுமே குழாய் கிணறும், மின் இணைப்பும் இருந்தது என்பதை உறுதியாக தெரிவித்து, இன்று வரை அதே நிலத்தில்தான் அவைகள் உள்ளன என்பதற்கு ஆதாரமாக கிராம நிர்வாக அலுவலர் அளித்த புல வரைபடம் மற்றும் அடங்கல் ஆகியவற்றை தாக்கல் செய்து அது பற்றிய உண்மையை அறிந்து கொள்ள நிலத்தை நேரில் பார்வையிட்டு முடிவெடுக்கும்படி கோரியிருந்த போதிலும் அது பற்றிய யாதொரு குறிப்பும் தீர்ப்புரையில் குறிப்பிடப்படவில்லை எனவும், நிலத்தை நேரில் பார்வையிட்டு உண்மை நிலையை தெரிந்து கொள்ளவும் முயற்சி செய்யவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 புகார் மனுவில் கண்ட மின்னிணைப்பு மனுதாரரின் தந்தை மாணிக்கம் பெயரில் கொடுக்கப்பட்ட மின்னிணைப்பாகும் எனவும், மின்னிணைப்பினை அவர் பெற்ற பிறகு அது மாணிக்கத்தின் சொத்தாகி விடுகிறதாகவும், மேற்கண்ட மின்னிணைப்பை பொறுத்து மாணிக்கம் ஆவணம் ஏதும் எழுதிக் கொடுக்காமல் இறந்து விட்டால் அவரது வாரிசுதாரர்கள் அனைவருக்கும் அந்த மின்னிணைப்பை பொறுத்து உரிமை ஏற்படுகிறதாகவும், அனைவரும் அதை சேர்ந்து அனுபவிக்கலாம் அல்லது மற்ற வாரிசுதாரர்களின் சம்மதத்துடன் ஒருவர் பெயரில் மாற்றிக் கொள்ளலாம். ஆனால் மாணிக்கம் உயிருடன் இருக்கும் போதே தன் விருப்பம் போல் ஆவணம் எழுதிக் கொடுத்து மின்னிணைப்பின் உரிமையை தன்னுடைய வாரிசுகள் யாரேனும் ஒருவருக்கு கொடுக்க உரிமை உள்ளது எனவும், இந்த சட்ட உரிமைப்படி மாணிக்கம் புகார் மனுவில் கண்ட மின்னிணைப்பை மனுதாரர் பெயருக்கு 24.02.2005 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் மூலமும் 18.10.2009 தேதியிட்ட பிழைதிருத்தல் பத்திரம் மூலமும் எழுதிக் கொடுத்து மனுதாரருக்கு உரிமையாக்கிவிட்டார் எனவும், அதன்படி மனுதாரர் பெயரில்தான் பெயர் மாற்றம் செய்திருக்க வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 எதிர்மனுதாரர்கள் செயற்பொறியாளர் தரப்பில் கூறப்பட்ட ஒரே வாதம் மாணிக்கம் முதலியார் பெயரில் மின்னிணைப்பு உள்ள போதும் அவர் 10.07.1989ல் கொடுத்த விவசாய மின்னிணைப்பு விண்ணப்பத்தில் புல எண்.133/2A குறிப்பிடப்பட்டிருப்பதாகவும், அந்த நிலம் குணசேகரனுக்கு சொந்தமானது என்பதால்

அவர் பெயருக்கு மின்னிணைப்பு பெயர் மாற்றம் செய்ததாகவும் தெரிவித்ததை வைத்து குறைதீர்க்கும் மன்றமும் பெயர் மாற்றத்தை உறுதி செய்துள்ளது தவறான அணுகு முறையாகும் எனவும், மின்னிணைப்பு கோரும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட புல எண் பற்றி மனுதாரருக்கு எதும் தெரியாது. ஆனால் புல எண்.132/1A2ல் எவ்வாறு மின்னிணைப்பு உள்ளது என்பதற்கு யாதொரு விளக்கமும் மின் வாரிய பொறியாளர்களால் கூற முடியவில்லை, மின் வாரியத்திற்கு தெரியாமலோ, அனுமதி இல்லாமலோ மின்னிணைப்பை வேறு நிலத்திற்கு மாற்ற முடியாது. இல்லையென்றால் தொடக்க காலத்திலேயே விண்ணப்பத்தில் கண்ட புல எண்ணுக்கு பதிலாக மனுதாரருக்கு சொந்தமான புல எண்.132/1A2க்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இது பற்றிய விளக்கம் எதும் பொறியாளர்களால் கொடுக்க முடியாத நிலையில் தற்பொழுது உள்ள நிலை குறித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை கருத்தில் கொள்ளாமலும் நிலங்களை நேரில் பார்வையிடாமலும் புல எண்.133/2Aல் மின்னிணைப்பு இருப்பது போல் ஒரு அனுமான அடிப்படையில் (on the basis of assumption) தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது தவறானது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 மனுதாரரின் தந்தை மாணிக்கம் பெயரில் இருந்த மின் இணைப்பை மாற்றுவதற்கு முன்பாக வாரிசுச் சான்றிதழை பெறாமலும், எல்லா வாரிசுதாரர்களுக்கும் அறிவிப்பு அனுப்பி அவர்களை விசாரிக்காமல் பெயர் மாற்றம் செய்ததும் தவறாகும் எனவும், மனுதாரரின் தரப்பை கேட்காமல் குணசேகரன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்தது இயற்கை நீதிக்கு எதிரானது (against principle of natural justice) எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 எனவே தாங்கள் பொறியாளர் ஒருவரை நியமித்து கிராம நிர்வாக அலுவலர், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் முன்னிலையில் மனுதாரருக்கு சொந்தமான புல எண்.132/1A2 மற்றும் புல எண்.133/2A ஆகிய இரண்டையும் பார்வையிட்டு குழாய் கிணறு மற்றும் மின் இணைப்பு ஆகியவை எந்த நிலத்தில் உள்ளது என்பதனை பார்வையிட்டு சமர்ப்பித்துள்ள ஆவணங்களை பரிசீலித்து ஆவணங்களின்படியும், சட்ட முறைப்படியும் மனுதாரருக்கு மட்டுமே மின் இணைப்பினை பெற உரிமை உள்ளது என்பதை முடிவு செய்து, கீழமை மன்றத்தின் 17.02.2023 தேதியிட்ட உத்தரவை ரத்து

செய்து குணசேகரன் பெயரில் பெயர் மாற்றம் செய்ததையும் ரத்து செய்து மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பெயரில் கடலூர் மாவட்டம் புவனகிரி வட்டம், மேல்மணக்குடி கிராமத்திலுள்ள விவசாய மின் இணைப்பு எண்.052-027-03 ஐ மாற்றி பதிவு செய்யும்படி உத்தரவிடுமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6.0 **<u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் கடலூர் அவர்கள், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களையும் பரிசீலனை செய்த பின்னரே தீர்ப்புரை வழங்கப்பட்டதாகவும், திரு.அறுமுகம் த/பெ.மாணிக்கம் அவர்களால் பெயர்மாற்றம் கோரும் மின்இணைப்பு எண்:052-027-3 ஆனது சர்வே எண் 133/2A ல் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் மனுதாரர் மின்இணைப்பு எண்052-027-3-ஐ தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய கோரி அளித்த விண்ணபத்துடன் தனக்கு சொந்தம் என்பதற்கான சர்வே எண்: 132/1A2-ற்குரிய ஆவணத்தை இணைத்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேற்படி மின்இணைப்பு எண்: 052-027-3 உள்ள 133/2A -ற்கான ஆவணத்தை சமர்ப்பிக்கவில்லை எனவும் எனவே மின்இணைப்பு எண்:052-027-3 உள்ள சர்வே எண் 133/2A ற்கான வருவாய் ஆவணங்களுடன் மனுதாரர் மின்இணைப்பு எண்: 052-027-3-ல் பெயர் மாற்றம் கோரி விண்ணப்பிக்கும் பட்சத்தில் மின்வாரிய விதிமுறைகளின்படி பெயர்மாற்றம் செய்து தரப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் செயற்பொறியாளர்/இ&ப/சிதம்பரம், உதவிசெயற்பொறியாளர்/இ&ப/பு.முட்லூர் மற்றும் உதவிமின்பொறியாளர்/ இ&ப/புவனகிரி அவர்களால் நேரடியாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் புல எண்:133/2A-ல் உள்ள பழைய போர் மற்றும் உள்ள:132/1A2-ல் உள்ள புதிய போர் என இரண்டு போர்கள் அருகருகே உள்ளது கண்டறியப்பட்டுள்ளதாகவும், ஆனால் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மின்இணைப்பு எண்:052-027-3 ஆனது புல எண்:133/2A லேயே வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் அதற்கான புகைப்பட ஆவணங்கள் உள்ளதகாவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 புவனகிரி வட்டம் மேலமணக்குடி கிராமத்தில் புல எண்: 132/1A2 மற்றும் 133/2A ஆகிய அருகருகே உள்ள இரண்டு நிலங்களும் திரு.மாணிக்கம் அவர்களுக்கே உரியதாக இருந்துள்ளதாகவும், இதில் திரு.மாணிக்கம் அவர்கள் புல எண்: 132/1A2 நிலத்தை மட்டும் திரு.ஆறுமுகம் அவர்களுக்கு பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளதாகவும், ஆனால் திரு.ஆறுமுகம் அவர்கள் பெயர் மாற்றம் கோரும் மின்இணைப்பு எண்:052-027-3 ஆனது 133/2Aல் வழங்கப்பட்டுள்ளதாகவும், எனவே மின் இணைப்பு எண்:052-027-3-இல் உள்ள புல எண் 133/2A-ற்கான வருவாய் ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் மின்இணைப்பு எண்:052-027-3-ல் பெயர் மாற்றம் செய்ய மின்வாரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 திரு.M.குணசேகரன் அவர்களுக்கு 1994 ம் ஆண்டு உயில் பத்திரபதிவுப்படி B ஷெட்யூல் புல எண்: 133/2A அவருக்கு உரியதாக இருந்ததால், உயில் ஆவணத்தின் அடிப்படையில் நிரு.M.குணசோரன் த/பெ.திரு.மாணிக்கம் என்பவருக்கு சொந்தமென கருதி வாரிசு சான்றிதழ் பெறப்படாமல் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாகவும், ஆனால் திரு. ஆறுமுகம் அவர்கள் அளித்த புகார் மனுவின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது திரு.M.குணசேகரன் த/பெ.திரு.மாணிக்கம் அவர்கள் புல எண்:133/4A விற்கான ஆவணங்களை சமர்ப்பித்து தவறாக பெயர் மாற்றம் செய்தது கண்டறியப்பட்டதாகவும், எனவே மின் இணைப்பு எண்:052-027-3ஐ திரு.M.குணசேகரன் த/பெ.திரு.மாணிக்கம் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்ட ஆணை இரத்து செய்யப்பட்டு மின் இணைப்பானது ஏற்கனவே இருந்த திரு. மாணிக்க முதலியார் த/பெ.பொன்னுசாமி பெயருக்கே மாற்றப்பட்டதாகவும், தற்போது மின் இணைப்பு எண்.052-027-3 திரு. மாணிக்க முதலியார் த/பெ.பொன்னுசாமி என்ற பெயரில் பயன்பாட்டில் உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மேல்முறையீட்டாளர் உயர்திரு மின்குறை தீரப்பாளர் அவர்களிடம் அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் செயற்பொறியாளர்/இ&ப/சிதம்பரம், உதவிசெயற்பொறியாளர்/இ&ப/பு.முட்லூர் மற்றும் உதவிமின்பொறியாளர்/இ&ப/ புவனகிரி அவர்களால் நேரடியாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் புலஎண்:133/2A-ல் உள்ள பழைய போர் மற்றும் புலஎண்:132/1A2-ல் உள்ள புதிய போர் என இரண்டு

போர்கள் அருகருகே உள்ளது கண்டறியப்பட்டுள்ளதாகவும், ஆனால் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மின்இணைப்பு எண்:052-027-3 ஆனது புல எண்:133/2A-லேயே வழங்கப்பட்டுள்ளதாகவும், எனவே புல எண்.133/2A-க்கு உரிய வருவாய் ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் மின்வாரிய விதிமுறைகளின்படி மின்இணைப்பு எண்:052-027-3-ல் பெயர்மாற்றம் செய்து தரப்படும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மேலும் புல எண்: 133/2A மற்றும் 132/1A2 ஆகிய இடங்களை ஆய்வு செய்து அதில் குழாய்கிணறு அமைக்கப்பட்டுள்ள புகைப்படங்களை மேல் நடவடிக்கைக்காக எதிர்மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளரின் தந்தையாரான மறைந்த காலஞ்சென்ற திரு மாணிக்க முதலியாருக்கு இரண்டு வாரிசுகளான திரு.ஆறுமுகம் மற்றும் திரு.குணசேகரன் இருப்பதாக அறிய முடிகின்றது. மேல்முறையீட்டாளர் தனது தந்தை மூலம் பெறப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் தனது தந்தை பெயரில் இருந்து வரும் மின் இணைப்பு 052-027-3 குழாய் கிணறுக்கு (Borewell) வழங்கப்பட்ட இலவச மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்ய வேண்டி FM sketch 132/1A2-இல் மற்றும் அடங்கல் இணைத்து கொடுத்த பொழுதும் பெயர் மாற்றம் செய்யாமல் நிராகரிக்கப்பட்டதாக முறையிட்டுள்ளார்.

7.3 ஒரு மின்னிணைப்பின் பெயர் மாற்றம் சம்பந்தமாக அறிய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதிகளை ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"5. பல்வகை கட்டணங்கள்*
> *7. பெயர் மாற்றம் கட்டணம்*

*(i) நுகர்வோர் இறந்த காரணத்திற்காகத் தரப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் இந்த விதித் தொகுப்பின் பிற்சேர்க்கையில் படிவம் (1) இல் பின் வருவனவற்றை உடனிணைத்து தரப்பட வேண்டும்.*

*(a) உரிய வட்டாட்சியரிடமிருந்தான வாரிசுச் சான்றிதழ் அல்லது உள்ளாட்சி அமைப்பின் வரி கட்டிய பற்றுச்சீட்டு போன்ற உரிமையை நிலை நாட்டும் சான்றுமெய்ப்பு (Proof)*

*(b) சட்டப்படியான வாரிசுகளின் மறுப்பின்மைச் சான்றிதழ், அப்படி யாராவது இருந்தால் அல்லது ரூ. 80 மதிப்புடைய நீதித்துறை சாரா (Nonjudicial) முத்திரைத்தாளில் இவ்விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (3) இலான காப்புறுதிப்பத்திரத்துடன் செல்வாக்குள்ள பொது மனிதரின் (Notary Public) அல்லது அரசிதழ் பதிவுற்ற அலுவலரின் அதிகாரச் சான்றின் பேரிலான ஆளேற்பு உறுதிமொழிப்பத்திரம் (Affidavit).*

*(c) ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட கட்டணத்துடன் புது விண்ணப்பமும் சம்மதிப்புப் படிவமும்,*

*(ii)பெயர் மாற்றத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும், பிற நிகழ்வுகளில், இந்த விதித் தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (1) மற்றும் (2) இல் பின்வருவனவற்றுடன் இணைத்துத்தரப்பட வேண்டும். (a) இந்த விதித் தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (4) இல் உள்ள உறுதியேற்புடன் பெயர் மாற்றத்துக்கான அடிப்படை ஆவணம்.*

*(b) மாற்றலுக்கு ஆதரவான ஆவணத்தில் அது உள்ளடங்கவில்லையானால், காப்பு வைப்புத் தொகையை மாற்றுவதற்கான நுகர்வோரின் சம்மதக் கடிதம், அத்தகைய சம்மதக் கடிதம் தரமுடியாவிட்டால் புதிதாகக் காப்பு வைப்புத் தொகை கட்ட வேண்டும்.*

*(c) ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட கட்டணத்துடன் புது விண்ணப்பமும், இசைவுப் படிவமும், விளக்கம்: துண்டிப்பில் இல்லாத மின்னிணைப்புகளுக்கு மட்டுமே பெயர் மாற்றம் வழங்கப்படும்."*

7.4 இந்நிலையில், மேல்முறையீட்டாளர் தன்னுடைய தந்தையிடமிருந்து தான செட்டில்மெண்ட் மூலம் பெறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். மேலும் போர்வெல் தன்னுடைய புல எண் 132/1A2–இல் தான் உள்ளதாகவும் 133/2A இல் போர்வெல் இல்லை என்றும் ஆகவே வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் தன் தந்தை P.மாணிக்கமுதலியார் பெயரிலுள்ள மின் இணைப்பு மாற்றிதரும்படியும் நுகர்வோர் குறைதீர்மன்றம் ஆணையை ரத்து செய்யவும் மேல்முறையீட்டாளர் முறையிட்டுள்ளார்.

7.5 எதிர்மனுதாரர் தனது வாதத்தில் புவனகிரி வட்டம் மேலமணக்குடி கிராமத்தில் புல எண் 132/1A2 மற்றும் 133/2A ஆகிய அருகருகே உள்ள இரண்டு நிலங்களும் திரு. மாணிக்கம் அவர்களுக்கு உரியதாக இருந்துள்ளதாகவும், இதில் திரு மாணிக்கம் அவர்கள் புல எண் 132/1A2 நிலத்தை மட்டும் திரு ஆறுமுகம் அவர்களுக்கு பத்திர பதிவு செய்து கொடுத்ததாகவும், ஆனால் திரு ஆறுமுகம் அவர்கள் பெயர் மாற்றம் கோரும் மின் இணைப்பு எண் 052-027-3 ஆனது 133/2Aல் வழங்கப்பட்டுள்ளதை அதற்கான புகைப்பட ஆவணங்கள் மூலம் அறியமுடியும் என வாதிட்டார்.

7.6 மேற்கண்ட மின் இணைப்பிற்கு மேல்முறையீட்டாளர் 133/2Aல் உள்ள மின் இணைப்பு மாற்றம் குறித்து மாவட்ட ஆட்சியருக்கு 22.07.2022-இல் புகார் அளித்ததாகவும் அதற்கு உரிய வருவாய் ஆவணங்கள் பிரிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்க க.எண்.செ.பொ/இ.ப/சிதம்/தொ.நு.உ/கோ.மி ஆத.மனு/அ.எண்.22/2022 நாள் 08.08.2022 வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் எதிர்மனுதாரர் தான் ஏற்கனவே மின்குறைதீர் மன்றத்தில் எடுத்துரைக்காத வாதமாக முறையீட்டாளரின் சகோதரர் திரு குணசேகரன், த/பெ. மாணிக்கம் அவர்கள் சர்வே எண் 133/2Aஇல் உள்ள மின் இணைப்பு எண் 052-027-3 தனது பெயருக்கு மாற்றி தருமாறு மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் புகார் மனு 12.09.2022 அன்று அளித்திருந்ததாகவும், அதற்கு திரு.குணசேகரன் மற்றும் அவரது சகோதரர் ஆகிய இருவரும் பெயர் மாற்றம் கோரியுள்ளதால் விவசாய மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்வதற்கு சட்ட பூர்வமான உரிமையை நிரூபித்து அதற்குரிய வருவாய் ஆவணங்களை பிரிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி க.எண்.செ.பொ/இ.ப/சிதம்/தொ. நு.உ /கோ.மிஆத.மனு/ அ.எண்.26/ 2022 நாள் 16.09.2022 வாயிலாக தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் வாதிட்டார்.

7.7 மேலும் மேல்முறையீட்டாளர் தனது வாதுரையில் தனது விருப்பம் போல் ஆவணம் கொடுத்து மின் இணைப்பின் உரிமையினை தன்னுடைய வாரிசுகள் யாரேனும் ஒருவருக்கு கொடுக்க உரிமை உள்ளது என்றும், இந்த சட்ட உரிமைப்படி முறையிடும்பொழுது மேல்முறையீட்டாளர் பெயரில் மின் இணைப்பை மாற்றம் செய்திருக்க வேண்டும் என்றும், மேலும் 132/1A2-இல் நிலத்தில் மட்டுமே குழாய் கிணறும் மின் இணைப்பும் இருகின்றது என்பதை ஆதாரமாக கிராம நிர்வாக அலுவலர்

அளித்த ஆவணங்களின் உண்மையின் அடிப்படையில் முடிவெடுக்க முறையிட்டு தீர்வில் அதை குறிப்பிடவில்லை என்று வாதிட்டார்.

7.8 இந்நிலையில் மேல்முறையீட்டாளரின் முறையீட்டு மனுவிலுள்ள உள்ளடக்க குறிப்புகளின் சாரம்சம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"எனது தந்தை புல எண் 133/2A நிலத்தை எனது சகோதரர் குணசேகரனுக்கு எழுதிக் கொடுத்துள்ள போதிலும் அந்த ஆவணத்தில் 133/2A நிலத்தில் குழாய் கிணறு இருப்பதாகவோ, மேலே குறிப்பிட்ட மின் இணைப்பு இருப்பதாகவோ குறிப்பிட்டோ குழாய் கிணறு மற்றும் மின் இணைப்புடன் கொடுப்பதாகவோ எழுதிக் கொடுக்கவில்லை."*

7.9 மேற்கண்ட சுய அறிவிப்பு ஒப்புதல் மூலம் புல எண் 133/2A நிலம் இருப்பதும் அது மேல்முறையீட்டாளரின் சகோதரர் திரு குணசேகரனுக்கு பாத்தியப்பட்டது என்பதும் தெளிவாகின்றது. மேலும் மேல்முறையீட்டாளர் திரு ஆறுமுகத்திற்கு புல எண் 132/1A2 இல் உள்ள நிலம் பாத்தியப்பட்டது என்பதை அறிய முடிகின்றது. அடுத்ததாக முறையீட்டாளர் மின் இணைப்பு பெயர் மாற்றம் கோரும் கோரிக்கையின் அடிப்படையிலான முடிவு செய்ய வேண்டியது இருப்பதால் 052-027-03 என்ற இலவச விவசாய ஆழ்குழாய் கிணறுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு பற்றிய விவரங்கள் ஆய்வுக்கு எடுத்து கொள்ளப்படுகின்றது.

7.10 திரு P.மாணிக்க முதலியார் பெயரில் புல எண் 133/2A மேலமனக்குடி கிராமத்தில் விவசாய மின் இணைப்பிற்கான விண்ணப்பம் 10.07.1989 அன்று பதிவு செய்யப்பட்டு 24.05.2000 அன்று இலவச விவசாய மின் இணைப்பு 052-027-03 பெறப்பட்டதாக எதிர்மனுதாரர் இணைத்துள்ள பேரேட்டின் மூலம் தெரியவருகிறது.

7.11 மேலும் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண் 052-027-03 புல எண் 132/1A2 இல் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் தான் உள்ளதாகவும் புல எண் 133/2A இல் இல்லை என்றும் முறையிட்டார். ஆனால் புல எண் 133/2A இல் ஆழ்குழாய் கிணறு (Borewell) இல்லை என்பதற்கான வருவாய் சான்றிதழ் எதுவும் இணைக்கவில்லை எனவும், முறையீட்டு மனுவின் அடிப்படையில் செயற்பொறியாளர்/சிதம்பரம், உ.செ.பொ/இ.ப/பு.முட்லூர் அவர்களால் நேரடியாக கள ஆய்வு செய்ததில் புல எண் 133/2A இல் உள்ள பழைய ஆழ்குழாய் கிணறு மற்றும் புல எண் 132/1A2 இல் புதிய ஆழ்குழாய்

கிணறு அருகருகே இருப்பது கண்டறியப்பட்டதாகவும், மின் இணைப்பு எண் 052-027-3 ஆனது புல எண் 133/2A இல் இருப்பதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.12 இந்நிலையில் ஏற்கனவே புல எண் 133/2A, 132/1A2 அருகருகே நிலம் என்பது தெளிவாக தெரியவருகின்றது. மேல்முறையிட்டாளருக்கு புல எண் 132/1A2 நிலமும் அவரது சகோதரர் திருP.குணசேகரன் அவர்களுக்கு 133/2A நிலம் பாத்தியப்பட்டதாக இருப்பதும், இவ்விரண்டு நிலங்களிலும் தற்சமயம் இரண்டு ஆழ்குழாய் கிணறு இருப்பதும், அதுவும் எல்லை கல் பதிக்கப்பட்ட இடத்திற்கு அருகில் இருப்பதும் எதிர்மனுதாரர் அனுப்பிய புகைப்படங்களின் மூலம் அறியமுடிகின்றது.

7.13 மேலும் மேல்முறையீட்டாளருக்கும் அவரது சகோதரர் திரு குணசேகரனுக்கும் இந்த மின் இணைப்பு பெயர் மாற்றம் உரிமை கோருவது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டதும் அதற்கு எதிர்மனுதாரர் பதில் அளித்ததன் மூலம் உரிமைகோரல் சர்ச்சை இருப்பது அறிய முடிகின்றது. மின் இணைப்பு புல எண் 133/2A நிலத்தில் உள்ள ஆழ்குழாய் கிணற்றிற்காக திரு மாணிக்கம் 24.05.2000-இல் விவசாய மின் இணைப்பு பெற்றதும் அலுவலக ஆவணங்கள் மூலமும் அறியப்படுகின்றது. மின்னிணைப்பு பெற்ற அந்த இடம் தற்பொழுது மேல்முறையீட்டாளரின் சகோதரர் திருP.குணசேகரன் அவர்களுக்கு பாத்தியப்பட்டதாக அறியப்பட்டுள்ளது.

7.14 ஒரு மின்னிணைப்பின் பெயர் மாற்றமானது தமிழ்நாடு மின்வழங்கல் விதிகளின்படி கோரப்பட்ட தக்க ஆவணங்களின்படியே பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும். ஆனால் மின்னிணைப்பு பெற்ற சர்வே எண் குறித்து மின்னிணைப்பின் உரிமைதாரரான திரு.மாணிக்கம் அவர்களின் வாரிசுகளுக்கிடையே உரிமைகோரல் சர்ச்சை இருப்பதாக அறியப்பட்டுள்ளது. சர்வே எண் குறித்து உரிய தீர்வு செய்வதற்கு வருவாய் துறைக்கு மட்டுமே உரிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே சட்ட பூர்வமான உரிமையை நிரூபித்து புல எண்.133/2A-க்கு உரிய வருவாய் ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விதிமுறைகளின்படி மின்இணைப்பு எண்:052-027-3-ல் பெயர்மாற்றம் செய்து தரப்படும் என தெரிவித்துள்ள எதிர்மனுதாரர் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது.

7.15 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் புல எண் 133/2Aஇல் ஆழ்குழாய் கிணறு இல்லை என்ற முறையீட்டிற்கு எந்தவித வருவாய் ஆவணங்களும் இணைக்கவில்லை என்று தெரியவருகின்றது. மேலும் மேல்முறையீட்டாளர் புல எண் 132/1A2 என்ற நிலத்திற்கு தான் மின் இணைப்பு எண் 052-027-03 திரு மாணிக்கம் பெயரில் வழங்கப்பட்டுள்ளதாக வாதிட்டுள்ளார். ஆனால் எதிர்மனுதாரர் புல எண் 133/2Aஇல் ஆழ்குழாய் கிணற்றுக்குதான் மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக வாதிட்டுள்ளார். மின்னிணைப்பு வழங்கப்பட்ட புல எண் சம்பந்தமாக இரு மாறுபட்ட வாதங்கள் உள்ள நிலையில் மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ள புல எண் குறித்து முடிவு செய்து இவ்வழக்கில் தீர்வு செய்வது சட்ட சிக்கலை ஏற்படுத்தக் கூடும் என நான் கருதுகிறேன். எனவே மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு பெற்றுள்ள புல எண் அவருக்கு சொந்தமானதுதான் என் சட்ட பூர்வமாக நிரூபித்து உரிய வருவாய் ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விதிமுறைகளின்படி மின்இணைப்பு எண்:052-027-3-ஐ பெயர் மாற்றம் செய்ய எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

7.16 மேலும், மேல்முறையீட்டாளர் உரிமதாரரின் பொறியாளர் ஒருவரை நியமித்து கிராம நிர்வாக அலுவலர், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் கூட்டு ஆய்வு செய்ய குறைதீர்ப்பாளரிடம் முறையிட்டார். மின்குறைதீர்ப்பாளருக்கு மூன்றாம் அலுவலக அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கும் அதிகாரம் இல்லை என்பது தெரியப்படுத்தப்படுகின்றது.

**8.0 <u>முடிவுரை:</u>**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளர் புல எண் 133/2Aஇல் ஆழ்குழாய் கிணறு இல்லை என்ற முறையீட்டிற்கு எந்தவித வருவாய் ஆவணங்களும் இணைக்கவில்லை என்று தெரியவருகின்றது. மேலும் மேல்முறையீட்டாளர் புல எண் 132/1A2 என்ற நிலத்திற்கு தான் மின் இணைப்பு எண் 052-027-03 திரு மாணிக்கம் பெயரில் வழங்கப்பட்டுள்ளதாக வாதிட்டுள்ளார். ஆனால் எதிர்மனுதாரர் புல எண் 133/2Aஇல் ஆழ்குழாய் கிணற்றுக்குதான் மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக வாதிட்டுள்ளார். மின்னிணைப்பு வழங்கப்பட்ட புல எண் சம்பந்தமாக இரு மாறுபட்ட வாதங்கள் உள்ள நிலையில் மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு பெற்றுள்ள புல எண் அவருக்கு சொந்தமானதுதான் என சட்ட பூர்வமாக

நிரூபித்து உரிய வருவாய் ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விதிமுறைகளின்படி மின்இணைப்பு எண்:052-027-3-ஐ பெயர் மாற்றம் செய்ய எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.37/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு M. ஆறுமுகம், – By RPAD
எண்.7, கடலூர் மெயின் ரோடு,
கீழ்புவனகிரி, கடலூர் மாவட்டம் – 608 601.

2. செயற்பொறியாளர்/ இ&ப/சிதம்பரம்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33-11 KV சிதம்பரம் துணை மின் நிலைய வளாகம்,
ஆனந்தீஸ்வரன் கோவில் அருகில்,
சிதம்பரம் – 608 001.

3. உதவி செயற்பொறியாளர்/ இ&ப/பி.முட்லூர்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/33-11 KV துணை மின் நிலைய வளாகம்,
CDM-CDL மெயின் ரோடு, பி.முட்லூர் – 608 501.

4. மேற்பார்வை பொறியாளர், - By email
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கேப்பர் மலை, கடலூர் – 607 004.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.